பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

01 09 2025 7 15

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு, கர்நாடகாவில் ஒருநாள் பயணமாக இன்று மைசூரு செல்கிறார்.

2. குஜராத்தில் தொடங்கப்பட்டுள்ள Jan Rakshak திட்டம் உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. பிரதமரின் ஸ்வநிதி திட்டம் ஏழை மக்களை பாதுகாத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

4. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மும்பை, சென்னை உட்பட பல்வேறு நகரங்களிலும் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன.

5. காஸா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் செய்தித்தொடர்பாளர் அபு உபைதா கொல்லப்பட்டார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு, கர்நாடகா மற்றும் தமிழகத்தில், இன்று முதல் நாளை மறுநாள் வரை, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இன்று, கர்நாடகா செல்லும் குடியரசுத்தலைவர், மைசூருவில் உள்ள அகில இந்திய பேச்சு மற்றும் செவித்திறன் பயிற்சி நிறுவனத்தின் வைரவிழா கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார்.

நாளை, சென்னையில் நடைபெறும் சிட்டி யூனியன் வங்கியின் 120-வது தொடக்க தின விழாவில் கலந்து கொள்ளும் அவர், நாளை மறுநாள் திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு விழாவிலும் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

குஜராத்தில் தொடங்கப்பட்டுள்ள Jan Rakshak திட்டம் உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பிரதமரின் தொலைநோக்கு திட்டம் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அகமதாபாதில் நேற்று இத்திட்டத்தை தொடங்கிவைத்துப் பேசிய அவர், இந்தப் புதிய திட்டத்தின்கீழ் பொதுமக்கள் தங்களது அவசர தேவைகளுக்காக 112 என்ற தொலைபேசி எண்ணிற்கு அழைத்தால் காவல்துறையினர் அவர்களுக்கு உதவி செய்வார்கள் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியின்போது குஜராத் மாநில காவல்துறையினருக்கான ஆயிரம் ரோந்து வாகனங்களின் சேவையைத் தொடங்கி வைத்த உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, அம்மாநில காவலர் வீட்டு வசதி கழகத்தால் கட்டப்பட்ட புதிய வீடுகளையும் திறந்து வைத்தார்.

<<<<>>>>

நடைபாதை வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வநிதி திட்டம் ஏழை மக்களை பாதுகாத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

அசாம் மாநிலம் திப்ருகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இத்திட்டப் பயனாளிகளிடையே கலந்துரையாடிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஏழைகளின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

நடைபாதை வியாபாரிகளும், அவர்களது குடும்பத்தினரும் கண்ணிமாக வாழ்வது ஸ்வநிதி திட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தில் கடனை திருப்பி செலுத்துவதற்கான நடைமுறைகள் சிறு வியாபாரிகளுக்கு உதவிகரமாக உள்ளது என்றும் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

அறிவாற்றல் மற்றும் தியான பூமியான மிதிலா நகரம், அதன் ஆன்மீக பண்புகள் காரணமாக, உலகம் முழுவதற்கும், ஒளி விளக்காக திகழ்கிறது என்று மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இந்தியாவின் ஆன்மீக, கலாச்சாரப் பணிகளில் தர்பங்கா அரசவம்சத்தின் பங்களிப்பு குறித்த கருத்தரங்கில் அவர் பேசினார்.

கவுதம் ரிஷியின் நியாய தர்ஷன தத்துவமும், இந்த புனித பூமியில் தான் தோன்றியதாக திரு.பூபேந்தர் யாதவ் குறிப்பிட்டார்.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மும்பை, சென்னை உட்பட பல்வேறு நகரங்களிலும் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன.

மும்பை மாநகராட்சிப் பகுதியில் மட்டும் நேற்று 17 ஆயிரத்துக்கும் அதிகமான விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அமைதியான முறையில் கரைக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதற்காக செயற்கை குளங்களும் உருவாக்கப்பட்டிருந்தன.

தமிழகத்தின் சென்னையிலும் 2 ஆயிரத்து 5 விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பட்டினப்பாக்கம், நீலாங்கரை, காசிமேடு, திருவொற்றியூர் கடற்கரைகளில் கரைக்கப்பட்டதாக மாநகர காவல்தறை தெரிவித்துள்ளது.

இதேபோன்று நாட்டின் பிற பகுதிகளிலும் விநாயகர் சிலைகள் நேற்று கரைக்கப்பட்டன.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தி, இலங்கையில் உள்ள இந்திய சமூகத்தினரால், சிறப்பாக கொண்டாடப்பட்டது.

சுவாமி விவேகானந்தா கலாச்சார மையத்துடன், இணைந்து, இந்திய கலாச்சார அமைப்பு மற்றும் மராத்தி மண்டலி அமைப்பின் சார்பில், கொழும்பு நகரில் வினாயகர் சிலை நிறுவப்பட்டு, மக்கள் வழிபாடு செய்தனர்.

இதையொட்டி பல்வேறு பாரம்பரிய கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

Kotagala பகுதியிலும் விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் சார்பில், விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டது.

சுற்றுவட்டாரப் பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள், ஊர்வலமாக Kotagala எடுத்துவரப்பட்டு, நீர்நிலைகளில் கரைக்கப்பட்டதாக, எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பஞ்சாப், ஹிமாச்சலபிரதேசம், உத்தராகண்ட், மற்றும் ஜம்மு-கஷ்மீரில் வெள்ள பாதிப்புகளை ஆய்வுசெய்ய மத்திய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சம்பந்தப்பட்ட மாநில அரசின் உயர் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு, மீட்புப் பணிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 24 மாநிலங்களுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாயும், தேசிய பேரிடர் மீட்பு நிதியிலிருந்து 12 மாநிலங்களுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும், உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பஞ்சாப் மாநிலத்தில், கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ராவி, பியாஸ் உள்ளிட்ட பல்வேறு ஆறுகளில், அபாய அளவைத் தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அனைகளிலிருந்தும் அளவிற்கு அதிகமான தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

ராணுவம், விமானப்படை, எல்லைப் பாதுகாப்புப் படை, தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினரும், பஞ்சாப் காவல்துறையினரும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

மிக மோசமாக பாதிக்கப்பட்ட குர்தாஸ்பூர் மற்றும் பதான்கோட் மாவட்டங்களில், விமானப்படை விமானங்கள் மூலம் மக்களுக்கு உணவுப் பொருட்கள் வினியோகிக்கப்பட்டது.

ஆயிரத்து 312 கிராமங்களை தண்ணீர் சூழ்ந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அம்மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங் கூறியுள்ளார்.

மாநிலத்தில், சுமார் 3 லட்சம் ஏக்கர் பரப்பிலான விளைநிலங்களும், ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில தலைமைச் செயலாளர் திரு.அனுராக் வர்மா தெரிவித்துள்ளார்.

வெள்ள பாதிப்புகளை சீரமைக்க உடனடித் தேவையாக, மத்திய அரசு 60 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவி வழங்க வேண்டுமென, பஞ்சாப் முதலமைச்சர் திரு.பகவந்த் மான், பிரதமருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். தொடர் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, அம்மாநிலத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகள், நாளை மறுநாள் வரை மூடப்பட்டுள்ளன.

<<<<>>>>

வணிக ரீதியான சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 51 ரூபாய் 50 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலை குறைப்பு இன்று முதல் அமலுக்கு வருகிறது.

இதன்படி தில்லியில் 19 கிலோ எடையுள்ள வணிக ரீதியான சிலிண்டரின் விலை ஆயிரத்து 580 ரூபாயாக இருக்கும் என்று எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் வீட்டு உபயோக சிலிண்டர்களின் விலையில் எந்த மாற்றமும் இல்லை.

<<<<>>>>

மிசோரம் மாநிலத்தில் சட்டவிரோத போதைப்பொருள் வியாபாரம் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்கூறும் வகையில் நான்கு மாதகால சிறப்பு பிரச்சார இயக்கம் இன்று தொடங்குகிறது. இந்த இயக்கம் மிசோ இளையோர் சங்கத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் என்று அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது. இந்த அமைப்பினரும், அரசு அதிகாரிகளும் போதைப்பொருள் பழக்கத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் எல்லையோரப் பகுதிகளில் வரும் டிசம்பர் 31ஆம் தேதி வரை விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பீஹார் வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து ஆட்சேபம் தெரிவிக்க இன்று ஒருநாள் மட்டுமே அவகாசம் உள்ளதால் வாக்காளர்களும், அரசியல் கட்சிகளும்

தங்களது ஆட்சேபங்களைத் தெரிவிக்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிகளுக்குப் பிறகு கடந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில் நேரடியாக 2 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுளளது.

18 வயது பூர்த்தியடைந்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட 15 லட்சத்திற்கும் அதிகமான மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 81 ஆயிரத்து 73 கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணையம் கூ.றியுள்ளது.

இதனிடையே, பீஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்தில் பெயர் விடுபட்டவர்கள் தங்களது பெயரைச் சேர்ப்பதற்கான அவகாசத்தை நீட்டிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

<<<<>>>>

காஸா பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய விமான தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் செய்தித்தொடர்பாளர் அபு உபைதா கொல்லப்பட்டார். இதனை இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு. இஸ்ரேல் கட்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார். இதனிடையே காஸாவின் புறநகர்ப் பகுதியில் இஸ்ரேல் படையினர் வான் வழியாகவும், தரை வழியாகவும் நடத்திய மற்றொரு தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் ஏராளமான வீடுகள் தரைமட்டமானதால் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலிய அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி மங்கோலியாவின் உலான்பாட்டர் நகரில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

-------------

ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி இரவு மணி 7.30க்கு நடைபெறும்.

<<<<The End>>>>